பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
26 10 2024 7 15
சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. அனைவரையையும் உள்ளடக்கிய வளர்ச்சியை கருத்தில் கொண்டு மத்திய அரசு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் கூறியுள்ளார்.
2. ஸ்பெயின் அதிபர் திரு பெட்ரோ **sanchez** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக நாளை புதுதில்லி வருகிறார்.
3. பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
4. விண்வெளி தொழில்நுட்பங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உந்துசக்தியாக திகழும் என்று இஸ்ரோ தலைவர் டாக்டர் சோம்நாத் தெரிவித்துள்ளார்.
5. புனேயில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், நியூஸிலாந்து 113 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**[]<<<>>>[]**

அனைவரையையும் உள்ளடக்கிய வளர்ச்சியை கருத்தில் கொண்டு மத்திய அரசு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அனைவரும் ஒரே குடும்பம் என்ற தத்துவம் நாட்டின் கலாச்சாரத்தை உலகிற்கு எடுத்துரைப்பதாக உள்ளது என்று தெரிவித்தார்.

வசுதேவ குடும்பகம் என்ற தத்துவம், உலக அளவில் ஆறில் ஒரு பங்கு மக்கள் தொகைக் கொண்ட இந்தியாவில், வன்முறையற்ற சமூகத்தையும், மூத்த குடிமக்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மதிப்பளிப்பது குறித்தும் வலியுறுத்துவதாக திரு ஜக்தீப் தன்கர் கூறினார்.

**[]<<<>>>[]**

ஸ்பெயின் அதிபர் திரு பெட்ரோ **sanchez** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக நாளை புதுதில்லி வருகிறார்.

பிரதமர் திரு நரேந்திரமோடியை அவர் சந்தித்து இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இந்தியாவில் உற்பத்தி செய்வோம் திட்டத்தின் கீழ் ஸ்பெயின் நிறுவனத்துடன் இணைந்து வதோதராவில் ஏற்படுத்தப்பட்டுள்ள விமான கட்டுமான தொழிற்சாலையை இரு தலைவர்களும் இணைந்து தொடங்கி வைக்கவுள்ளனர்.

ஸ்பெயின் அதிபர் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கரையும் சந்தித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இதையடுத்து மும்பையில் வர்த்தகம், தொழில்துறை தலைவர்கள் மற்றும் திரைப்படத் துறையைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் ஸ்பெயின் அதிபர் கலந்துரையாடவுள்ளார்.

ஸ்பெயின் அதிபரின் இந்த பயணத்தின்போது பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

18 ஆண்டுகளுக்கு பிறகு ஸ்பெயின் அதிபர் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்வது இதுவே முதல்முறை என்று வெளியுறவுத்துறை செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

விண்வெளி தொழில்நுட்பங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உந்துசக்தியாக திகழும் என்று இஸ்ரோ தலைவர் டாக்டர் சோம்நாத் தெரிவித்துள்ளார்.

தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்திய அரசின் விண்வெளி திட்டங்கள் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதுடன், தனியார் முதலீடுகளையும் ஊக்குவிக்கும் என்று கூறினார்.

விண்வெளி தொழில்நுட்பங்கள் தொடர்பான செயலிகள், தொழில் முனைவோர்களிடையே அத்துறை மீதான ஆர்வத்தை அதிகரிக்க உதவிடும் என்று திரு சோம்நாத் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பெரு நிறுவனங்கள் 2024-25-ஆம் மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரி அறிக்கையை தாக்கல் செய்வதற்கான கால அவகாசத்தை மத்திய நேரடி வரிகள் வாரியம் நீட்டித்துள்ளது.

வருமான வரி அறிக்கையை தாக்கல் செய்வதற்கு இம்மாதம் 31-ஆம் தேதி கடைசி நாள் என்ற நிலையில், அடுத்த மாதம் 15-ஆம் தேதிவரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளதாக நேரடி வரிகள் வாரியத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

தொழிலாளர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் புதிதாக 20 லட்சத்து 74 ஆயிரம் பேர் சேர்ந்துள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நடப்பு ஆண்டில் 28 ஆயிரத்து தொள்ளாயிரத்து 17 புதிய தொழில் நிறுவனங்கள் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் புதிய சந்தாதாரர்கள் எண்ணிக்கை ஆண்டுதோறும் ஆறு புள்ளி எட்டு சதவீதம் அதிகரித்து வருவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் இரண்டாவது பட்டியலை அக்கட்சி இன்று வெளியிட்டுள்ளது.

இந்த பட்டியலில் 22 வேட்பாளர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

இதனிடையே தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சரத்பவார் பிரிவு 22 வேட்பாளர்கள் அடங்கிய இரண்டாவது பட்டியலை மும்பையில் இன்று வெளியிட்டது.

**[]<<<>>>[]**

ஜார்க்கண்ட் மாநிலத்தின் எல்லையையொட்டி அமைந்துள்ள ஐந்து மாவட்டங்களில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில காவல்துறை தலைவர் திரு அஜய்குமார் சிங் கூறியுள்ளார்.

ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளதையொட்டி பதற்றமான வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள பகுதிகளில் தீவிரவாதிகள் நடமாட்டத்தை கண்காணிக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதனிடையே தேர்தலையொட்டி அம்மாநிலம் முழுவதும் நடைபெற்று வரும் சோதனை நடவடிக்கையின் போது 57 கோடி ரூபாய் மதிப்பிலான சட்டவிரோத பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தேர்தல் நடத்தை நெறிமுறைகளை மீறியதாக காவல்துறையினர் 19 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் கிராமப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மாநில நிதி அமைச்சர் திரு தஙகம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டியில் புதிய துணை மின் நிலைய கட்டுமான பணிகளை தொடங்கி வைத்து பேசிய அவர், இதற்கென 32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று துணைமின் நிலையம் அமைக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறைந்த மின்னழுத்தம் காரணமாக ஏற்படும் பாதிப்புகளிலிருந்து விடுபட்டு, முழுநேர மின்சாரத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் இப்பகுதி விவசாயிகள் பயனடைவார்கள் என்றும் திரு தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

கஷ்மீர் குறித்து ஐ நா பாதுகாப்பு சபை கவுன்சிலில் பாகிஸ்தான் தவறான தகவல்களை அளித்து வருவதாக இந்தியா குற்றம்சாட்டியுள்ளது.

ஐ நா பாதுகாப்பு சபை கவுன்சில் கூட்டத்தில் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று பேசிய ஐ நா-வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு பர்வத நேனி ஹரிஷ், தொடர்பு இல்லாத விவாதங்களில் ஜம்மு-கஷ்மீர் விவகாரம் குறித்து பாகிஸ்தான் கருத்து தெரிவித்து வருவதாக குறை கூறினார்.

நாட்டின் அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் தவறான கருத்துக்களை தொடர்ந்து கூறி பாகிஸ்தான் ஆதாயம் தேட முயற்சிப்பதாக திரு பர்வத நேனி ஹரிஷ் தெரிவித்தார்,

**[]<<<>>>[]**

ஈரானில் உள்ள ராணுவ நிலைகளை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலையடுத்து மேற்காசியாவில் பதற்றமான சூழல் நிலவுவதாக ஈரான் நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக இஸ்ரேல் வெளியிட்டுள்ள அறிக்கையில், இம்மாதம் ஒன்றாம் தேதியன்று ஈரான் நடத்திய ஏவுகணை தாக்குதலுக்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதனிடையே சிரியாவின் மத்திய மற்றும் தென்பகுதிகளில் உள்ள ராணுவ நிலைகளைக் குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் கூறியுள்ளன.

**[]<<<>>>[]**

இந்தியா மற்றும் அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை பரஸ்பரம் இரு நாடுகளும் மேற்கொண்டு வருகின்றன.

இது தொடர்பாக நடவடிக்கைகளை இருநாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படுத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நடைமுறை சில ஆண்டுகளுக்கு தொடரும் என்றும், அமெரிக்காவில் இந்தியர்கள் சட்டபூர்வமாக குடியேறுவதற்கான நடவடிக்கைகள் உருவாக்கப்படும் என்றும் அந்த செய்திகள் கூறுகின்றன.

**[]<<<>>>[]**

புனேயில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், நியூஸிலாந்து 113 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் நியுசிலாந்து இரண்டுக்கு — பூஜ்ஜியம் என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

**[]<<<>>>[]**

ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.
மலேசியாவில் நடைபெற்ற நியுசிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் இரு அணிகளும் தலா இரண்டு கோல் அடித்த நிலையில் பெனால்டி சூட்-அவுட் முறை கடைபிடிக்கப்பட்டது.
இதில் இந்தியா மூன்றுக்கு - இரண்டு என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கோப்பையை கைப்பற்றியது.

**[]<<<>>>[]**

**Dutch** ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shetty** மற்றும் சங்கர் முத்துசாமி சுப்ரமணிய்ன ஆகியோர் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளனர்.
இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி போட்டியில் ஆயூஷ் ஷெட்டி 23-21, 21-18 என்ற செட் கணக்கில் இஸ்ரேலின் டேனியல் **dubovenko**ம-வை வென்றார்.
மற்றொரு போட்டியில் சங்கர் முத்துசாமி சுப்ரமணியன் 21-14, 21-11 என்ற செட் கணக்கில் பெல்ஜியத்தின் **Julien carraggi** -யை வென்றார்.

**[]<<<>>>[]**

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனிக்கா பத்ரா காலிறுதிக்கு முன்னேறி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.